S.C.No. 153/2014 Date: 11.03.2026

PW1: ராமதாஸ் த/பெ. சுப்பையா

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>

6) 13.09.2013ம் தேதி காலை 9.00 மணியளவில் விருதுநகர், சுப்பையாநாடார் பள்ளி அருகே 200 மீ தொலைவில் எனது உறவினர்கள் பாண்டி, மாரியப்பன் ஆகியோர்களின் மகன்களிடம் பேசி கொண்டிருந்தாக தனிப்புகாரில் குறிப்பிட்டுள்ளேன். டாடா சுமோ காரில் இருந்து காவல் ஆய்வாளர் மூக்கன், சார்பு ஆய்வாளர் சுரேஷ்குமார், மற்றும் பார்த்திபன் வந்து என்னை பார்த்து இங்கு என்னடா பண்ணி கொண்டிருக்கிறாய் தேவிடியா மவனே என்று அசிங்கமாக திட்டியதாக எனது தனிப்புகாரில் குறிப்பிட்டுள்ளேன். அது போல் மேற்படி 3 நபர்களும் என்னை ஷீவால் மிதித்து என் சட்டையை கிழித்த விபரத்தை தனிப்புகாரில் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி 3 நபர்களும் கையில் வைத்திருந்த துப்பாக்கியை எனது நெற்றியில் வைத்து இனிமேல் இந்து முன்னணி அமைப்பில் இருந்தால் உன்னை சுட்டு கொன்று விடுவோம் என்று மிரட்டிய விபரத்தை எனது தனிப்புகாரில் குறிப்பிட்டுள்ளேன்.

7) கிழக்கு காவல்நிலையத்தில் என்னை அழைத்து வந்து என்னை மீண்டும் தாக்கி இனிமேல் இந்த ஏரியாவில் இருக்கக்கூடாது வேறு எங்காவது சென்றுவிடு என துப்பாக்கியை வைத்து மிரட்டியதாக புகாரில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி சம்பவம் ஈஸ்வரன், ராமச்சந்திரன், கண்ணன், ஆண்டனி, பட்டமுத்து, ராஜா மற்றும் அருள்ராஜ் ஆகியோர்களுக்கு நேரடியாக தெரியும் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். மருத்துவமனைக்கு அழைத்து சென்று மீண்டும் என்னை காவல்நிலையம் அழைத்து வந்து தாக்கினர் என்றும்,

எனக்கு சுகர், பிரஷர் இல்லை என்பதால் எவ்வளவு அடித்தாலும் தாங்குவாய் என கூறினார்கள் என்ற விபரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

8) சார்பு ஆய்வாளர் சுரேஷ்குமார் என்னை மருத்துவமனை அழைத்து சென்றால் அவர் என்னை சுட்டுவிடுவார் என்றும், அதனால் வேறு காவலர் மூலம் என்னை மருத்துவமனை அனுப்புமாறு கனம் நீதிபதி அவர்களிடம் கூறிய விபரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன், மருத்துவமனை என சொல்லவில்லை, மாவட்ட சிறைச்சாலை என சொன்னேன். காவல் அடைப்பு அறிக்கையை பார்வையிட்ட சிறை கண்காணிப்பாளர் என்னை அங்கு சிறையில் அடைக்கமுடியாது என கூறினார் என்றும் அதற்கு சார்பு ஆய்வாளர் சுரேஷ்குமார் தான் பார்த்து கொள்வதாக சொன்னார் என்றும் சிறை காவலர்கள் என்னை சிறைக்குள் அனுமதிக்க மறுத்தனர் என்ற விபரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். 13.09.2013 ம் தேதி காலை 9.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் சுரேஷ்குமார் என்பவரை நானும், ராஜா, அருள்ராஜ் மற்றும் பாண்டி ஆகியோர்கள் தாக்கி கொலைமுயற்சி செய்ததாக எங்கள் மீது இந்நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.171/2014 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நான் பொய்யாக இவ்வழக்கை தனிப்புகாராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9) சுப்பையா நாடார் பள்ளி உள்ள இடம் ஆட்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சம்பவ காலத்தில் அதிக ஆட்கள் நடமாட்டம் இல்லை. சுப்பையா நாடார் பள்ளி அருகே அரசு மருத்துவமனை உள்ளது, கடைகள் இல்லை. கடைகள் மற்றும் ஆட்கள் நடமாட்டம் அதிகம் உள்ள

பகுதி என்றும், அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்து முன்னணி அமைப்பினர் சார்பாக மேற்படி பள்ளிக்கு சென்ற மாணவர்களை தடுத்து பள்ளிக்கு செல்லவிடாமல் மறியலில் ஈடுபட செய்ததால் சம்பவ இடத்தில் போலிசார் வரவழைக்கப்பட்டார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் பொதுமக்கள் சுமார் 50 நபர்கள் கூடியிருப்பார்களா என்றால் சுமார் 15 நபர்கள் அங்கு இருந்தனர்.

10) போலிசார் அங்கு வைத்து என்னை அடித்ததில் உடல் முழுவதும் வீக்க காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். என்னை அடித்தவுடன் சம்பவ இடத்தில் இருந்து ஓடி விட்டேன் என்றால் சரியல்ல, என்னையும், ராஜா, அருள்ராஜ் ஆகியோர்களை போலிசார் வாகனத்தில் ஏற்றி கிழக்கு காவல்நிலையம் அழைத்து சென்றனர். எங்கள் 3 பேரை தவிர வேறு நபர்கள் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான், இரண்டு மாணவர்கள் மட்டும் இருந்தனர். எங்கள் 3 பேரையும் காவல்நிலையத்தில் ஹாலில் வைத்து அடித்தனர். அதில் எங்கள் 3 பேருக்கும் இரத்தகாயம் ஏற்பட்டது என்றால் இரத்தகாயம் ஏற்படவில்லை, வீக்க காயம் ஏற்பட்டது. போலிசார் துப்பாக்கியை எனது நெற்றியில் வைத்து கொன்று விடுவதாக மிரட்டிய விபரத்தை காவல் அடைப்பின் போது கனம் நீதிபதி அவர்களிடம் நான் சொன்னேன். காவல்நிலையத்தில் வைத்து போலிசார் என்னை துப்பாக்கியால் சுட்டு கொன்றுவிடுவதாக மிரட்டிய விபரத்தை கனம் நீதிபதி அவர்களிடம் சொன்னேன், சம்பவ இடத்தில் வைத்து போலிசார் என்னை துப்பாக்கி காட்டி மிரட்டிய விபரத்தை கனம் நீதிபதி அவர்களிடம் சொல்லவில்லை. எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் எனக்கு வெளிப்புற காயங்கள் இல்லை என சான்று வழங்கியுள்ளனர் என்றால் அது பற்றி தெரியவில்லை, நான் 3 நாட்கள் மதுரை மத்திய சிறையில் உள்ள

மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். சம்பவம் நடந்து சுமார் 7 நாட்கள் கழித்து நான் பிணையில் வந்தேன் என்றால் சரிதான்.

11) 22.09.2013ம் தேதி தென்மண்டல ஐ.ஜி மற்றும் விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் மனு பு.த.சா.ஆ.2 மற்றும் பு.த.சா.ஆ.3 கொடுத்தேன் என்றால் சரிதான். பொதுவாக உயர் அதிகாரிகளிடம் புகார் மனு கொடுக்கும் போது அதற்கு புகார் மனு ஏற்பு ரசீது கொடுப்பார்கள் என்றால் சரிதான். பு.த.சா.ஆ.2 மற்றும் பு.த.சா.ஆ.3 புகார் மனுக்கள் நேரடியாக கொடுத்தற்கு புகார் மனு ஏற்பு ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பு.த.சா.ஆ.2 மற்றும் பு.த.சா.ஆ.3 புகார் மனுக்கள் சொன்ன தேதியில் கொடுக்கவில்லை என்பதால் தான் புகார் மனு ஏற்பு ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார் மனுக்கள் கொடுத்து சுமார் 9 மாதங்கள் கழித்து 11.06.2014ம் தேதி கனம் நீதித்துறை நடுவர் எண்.2, விருதுநகரில் தனிப்புகார் Crl.M.P.No.3571/2014 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், 7 மாதங்கள் நான் நிபந்தனை கையெழுத்து செய்து வெளியூரில் இருந்தேன்.

12) எனது தனிப்புகாரில் பாரா 4ல் விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும், மதுரை சரக காவல் துணை தலைவர் அவர்களுக்கும் நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் மனு கொடுத்தேன் என்று சொல்லியுள்ளதில் 22.09.2013ம் தேதி என பேனாவால் நுழைத்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னை எதிரிகள் அசிங்கமான வார்த்தைகளால் பேசியதால் பொது அமைதிக்கு பங்கம் ஏற்பட்டதாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் மிரட்டியதால் எனக்கு பயம் ஏற்பட்டது என்றும், உயிருக்கும்,உடைமைக்கும் பாதுகாப்பு கோரி உயர் அதிகாரிகளிடம் கொடுத்த புகார் மனுவில் சொல்லவில்லை

என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். எனது புகார் மனுவிலோ, தனிப்புகாரிலோ சொன்னபடி எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என் மீது பதிவு செய்த வழக்கில் இருந்து தப்புவதற்காக பொய்யாக தனிப்புகாரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13) எங்கள் 4 பேர் மீதும் கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.440/2013 பிரிவுகள் 294(பி), 332, 307 இதசவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **எ.த.சா.ஆ.1** ஆகும். நானும், ராஜா மற்றும் பாண்டி இந்து முன்னணி அமைப்பை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அருள்ராஜ் எனது நண்பர் என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னபடி சொன்ன விதத்தில் எந்த வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.